

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவில், அரியலூர் நகர கழகத்தின் ஏற்பாட்டில், அரியலூர் பேருந்து நிலையம் அருகில் மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். இந்நிகழ்வில் அரியலூர் நகர கழக செயலாளர் இரா.முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.



ஈரோடு மத்திய மாவட்டம் பவானி நகர கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் வழிகாட்டுதலின்படி ப.சீ.நா. இளங்கோவன் ஏற்பாட்டில் பவானி நகர் மன்ற தலைவர் சிந்தூரி இளங்கோவன் தலைமையில் அலங்கரித்துவைக்கப்பட்ட கலைஞரின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்திவிட்டு, நகர கழக அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமை!

# எழும்பூர் தெற்கு பகுதி மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பில் கலைஞரின் புத்தெழுச்சி நாள்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. ஈரோடு வீரமணி, மேயர் பிரியா பங்கேற்பு!

சென்னை, ஜூன்.11-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் மாவட்ட மகளிர் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள்- புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி-12 வாழ்த்தட்டும் பெண்மை!! வளரட்டும் நன்மை!! எனும் தலைப்பில், மாவட்ட மகளிர் கொண்டாடும் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் விழா இன்று (11.06.2026, - வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில், சென்னை,டவுட்டன், ஒய் எம் சி ஏ ஹாலில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ,கோ. ஏகப்பன், வி. சுதாகர்,சொ. வேலு.எம்.சி, கே எஸ் எம் நாதன், புனிதவதி எத்திராசன்,. சரிதா மகேஷ் குமார் எம் சி, டாக்டர் ஜி. சாந்தகுமாரி எம் சி ,சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், ஏ நிர்மலா தேவி, ஆர்.கலைச்செல்வி, கே அன்னபூரணி, கே வள்ளி, ஆர் கிருஷ்ண வேணி, எஸ் விஜயலட்சுமி, கே எம் ஸ்னோபா, ஜெ தேவ கிருபை, எஸ். ஜான்சி ராணி, சகினா பேகம், சூர்யா ரகு அமல் பாண்டியன், யு. இலக்கியா, எம் எழில், எஸ் விஜயலட்சுமி, கே சாரதா எம் சி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வி.விஜயகுமார், ஆர் பாபு, வீ நதியா, ஜி ஞானதீபம், புனித மோகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்பிறந்த நாள் விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருமிகு. கனிமொழி கருணாநிதி. எம்.பி. அவர்களும், கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு.வீரமணி அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சி மேயரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான திருமதி.பிரியா ராஜன். ஆகியோர் பங்கேற்று சிறப்பிக் கின்றார்கள்.

இவ்விழாவில் திரு தயாநிதி மாறன் எம்பி ,கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, இ பரந்தாமன், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம்.சி, பி.எம்.யாழினி, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், ப. ரங்கநாதன். பி கே மூர்த்தி, கே.சந்துரு, சி. மகேஷ் குமார், கவிஞர் நன்மாறன் எம். விஜயகுமார், சங்கரி நாராயணன், என் பி எம் ஷேக் அப்துல்லா, ஆர்.வரதன் மாவட்ட கழக நிர்வாகிகள்: தேவ ஜவகர், ஜி. மகாதேவன், MC,இசட்.ஆசாத், பகுதி கழக செயலாளர்கள்: ஐசி எப் வ.முரளிதரன்,எ.நாகராசன்,வே.வாசு ,கூ.பீ. ஜெயின், எஸ்.இராஜசேகர் எஸ்.முரளி. ஜோசப் சாமுவேல், டிஎஸ்பி ராஜகோபால், எம் டி ஆர் நாகராஜ், செ.தமிழ்வேந்தன் எம்.சாமி கண்ணு, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ. மணி,எஸ்.பன்னீர் செல்வம், டி.வி.செம்மொழி, சாவித்திரிவீரராகவன்,எம் இப்ராஹிம் கனி, இரா கலைச் செல்வி, டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம்.சி., ரமேஷ் (எ) நீலகண்டன் எம் சி. பி உதயசங்கர் பிஜே துளசிங்கம், மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில்விஜய், ஜெ.பால முருகன், எஸ்.தனசேகர்,க. வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா , நா.துலுக்காணம் எல்.பி. எஃப் மோகன்,

துரை கண்ணன், ஆர் எஸ் சித்திக், ம. அசோக்குமார், எம்.பெரோஸ்கான் , கா.ராஜ்முகமது இரா.வீரமணி.து.ஆயிரம்,கு. கிருஷ்ணமூர்த்தி,பி. விஜயகுமார் பா.பிரதீப் குமார் எல். சம்பத்குமார், இரா வீரமணி, எம். பெரோஸ் கான், கா.ராஜ் முஹம்மது, நாதுலுக்கானம் எம். விநாயகம் மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

இறுதியில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி. நன்றி கூறுகிறார்.

### எஸ்.ஆர்.எல்.இதயவர்மன் தலைமை! மு.தேவராஜ் வரவேற்புரை!

# திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் கலைஞர் பிறந்தநாள் மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் – முனைவர் சபாபதி மோகன் சிறப்புரை!

சென்னை, ஜூன்.11-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர், திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் எஸ். ஆர்.எல்.இதயவர்மன் தலைமையில், பேரூர் கழக செயலாளர் - பேரூராட்சி மன்ற தலைவர் திருப்போரூர் மு.தேவராஜ் வரவேற்புரையில், திருக்கழுக்குன்றம் ஒன்றிய கழக செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் வீ.தமிழ்மணி, மாவட்ட பொருளாளர், மாமல்லபுரம் நகர கழக செயலாளர் வெ.விஸ்வநாதன், திருப்போரூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.சேகர், திருக்கழுக்குன்றம் பேரூர் கழக செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் ஜி.டி.யுவராஜ் ஆகியோர் முன்னிலையில் இன்று (11.06.2026 - வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்கு ரவுண்டானா அம்பேத்கர் சிலை அருகில், திருப்போரூரில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதி மோகன், க.செல்வம் எம்.பி. ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இதில் ஜி.சி. அன்புசெழியன், ஆர்.டி.அரசு, எம். செல்வகுமார், வீ.விஜயகுமார், ச.சசிகலா, ஆர். கோவிந்தன், காயத்ரி அன்புசெழியன், சத்யா சேகர், சா.பச்சையப்பன், அருள்மணி, ஆர்.கே. ராஜேஷ், டி.ஜெயச்சந்திரன், ஆர்.பரசுராமன், பா.ஞானப்பிரகாசம், தி.க. சுகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொள்கின்றனர்.

இறுதியில் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க.கௌரி சங்கர் நன்றி கூறுகிறார்.



நாமக்கல் மாவட்ட கழக இளைஞர் அணி சார்பில், முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா ராசிபுரத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே ஆர் என் ராஜேஸ் குமார் அறிவுறுத்தலின் பேரில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விஸ்வாவின் ஆலோசனையின்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.கார்த்திக் தலைமையில் நடைபெற்ற விழாவில் கழகக் கொடி ஏற்றப்பட்டு, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, கலைஞர் அவர்களின் புகழும் சாதனைகளும் நினைவுகூரப்பட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது . இந்நிகழ்ச்சியில் ராசிபுரம் நகர இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# 'நவீன தமிழ்நாட்டின் சிற்பி' - மாணவர்களிடையே கருத்தரங்கம்!

## மாணவரணிச் செயலாளர் ஈரோடு வீரமணி அறிவிப்பு!

சென்னை, ஜூன்.11-

"நவீன தமிழ்நாட்டின் சிற்பி" என்ற தலைப்பில் மாணவர்களிடையே கருத்தரங்கம் நடைபெறுகிறது.

இது குறித்து மாணவரணிச் செயலாளர் ஈரோடு வீரமணி அறிவிப்பு வருமாறு:-

கழக மாவட்டம் - தேதி - கருத்துரையாளர்கள் - ஏற்பாட்டாளர் வருமாறு

திருப்பூர் மத்திய -14.06.2026 - ஸ்ரீராம், இளம் பேச்சாளர் - து. கோபிநாத், மாவட்ட அமைப்பாளர், திருப்பூர் மத்திய மாவட்டம்.

புதுக்கோட்டை - 20.6.2026 -சுப. வீரபாண்டியன் / அலீம் அல் புகாரி - ச. இளையசூரியன், மாவட்ட அமைப்பாளர், புதுக் கோட்டை மாவட்டம்.

தஞ்சாவூர் மத்திய - 27.6.2026 -செ. மெ மதிவதனி /அலீம் அல் புகாரி - ம. ஆசாத், மாவட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.

கோவை தெற்கு - 27.6.2026 - செந்தலை கௌதமன் - சூலூர் ஆர். பிரபு, மாவட்ட அமைப்பாளர், கோவை தெற்கு மாவட்டம்.

கோவை வடக்கு - 28.6.2026- கரூர் முரளி - செ.அந்தோணிராஜ், மாவட்ட அமைப்பாளர் - கோவை வடக்கு மாவட்டம்.

நாமக்கல் - 28.6.2026 - திருச்சி சிவா - ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட மாணவர் அணி.

இவ்வாறு தி.மு.க. மாணவரணி செயலாளர் ஈரோடு வீரமணி தெரிவித்துள்ளார்.

### திரு.வி.க.நகர் மண்டலம்,

# வார்டு 74-க்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## மேயர் திருமதி ஆர்.பிரியா நேரில் ஆய்வு மேற்கொண்டார்!



சென்னை,ஜூன்.11-

பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பாக நேற்று முன்தினம் (09.06.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேயர் , திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட மங்களபுரம், கிருஷ்ணதாஸ் பிரதான சாலையில் உள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நூலகம், சுப்புராயன் தெருவில் உள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நூலகத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, படைப்பகத்தினைப் பயன்படுத்தி படித்து வரும் நபர்களிடம் கலந்துரையாடி தேவையான வசதிகள் குறித்து கேட்டறிந்தார். அவர்களின் கோரிக்கையின்படி படைப்பகத்தினைப் பயன்படுத்தும் நேரத்தினை அதிகரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, குளக்கரை சாலையில் ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் புதிதாக கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தினார்.

பின்னர், சந்திரயோகி சமாதி சாலையில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் தண்ணீர் வசதி, சுகாதாரப் பணிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, கூடுதலான குடிநீர் வசதி ஏற்படுத்திட சென்னை குடிநீர் வாரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், இப்பகுதியில் உள்ள குழந்தைகள் மையத்தினைப் பார்வையிட்டு குழந்தைகள் மையத்தினை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, ஜமாலியா நகரில் ரூ.9.46 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய வணிக வளாகம் கட்டடப் பணி மற்றும் பாஷ்யம் முதல் தெருவில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையக் கட்டடம், ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பிக்கிள்பால் விளையாட்டுத் திடல் மற்றும் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மகளிர் உடற்பயிற்சிக் கூடம் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு, பணிகள் அனைத்தும் விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மண்டல அலுவலர் ஜி.சொக்கலிங்கம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர்

# த.சந்திரசேகரனின் தாயார் திருமதி த.பிச்சையம்மாள் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



புதுக்கோட்டை, ஜூன். 11-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதி விராலிமலையைச் சேர்ந்த கழக விவசாயத் தொழிலாளரணி துணைத் தலைவரும், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவருமான, த.சந்திர சேகரனின் தாயார் த.பிச்சையம்மாள் அவர்கள் நேற்று (10.06.2026 - புதன்) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த த.பிச்சையம்மாள் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அம்மையார் அவர்களது இறுதி ஊர்வலம் இன்று (11.06.2026 வியாழன்) காலை 10 மணியளவில் விராலிமலையில் உள்ள த.சந்திரசேகர் இல்லத்திலிருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

### மின்துறை அதிகாரியை விசாரிக்காமலேயே

# செருப்பால் அடிப்பேன் என்கிறார் அமைச்சர்!

## ஜோசப் விஜய் சார்! நடவடிக்கை உண்டா?

காஞ்சிபுரம், ஜூன் 11–

காஞ்சிபுரம் மாவட்டம் நாரப்பாக்கம் பகுதியில் உள்ள மின்துறை அதிகாரி ஒருவரை அவரைப்பற்றி விசாரிக்காமலே செருப்பால் அடிப்பேன் என்று வனத்துறை அமைச்சர் ரஞ்சித்குமார் குறிப்பிட்டுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் நாரப்பாக்கம் பகுதியில் த.வெ.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அமைச்சராக பொறுப்பேற்றிருப்பவர் ரஞ்சித்குமார்.

அவர் இரு தினங்களுக்கு முன்னர் அப்பகுதியில் நன்றி தெரிவிக்கும் கூட்டங்களில் பங்கேற்றார். அப்போது அங்கிருந்தவர்கள், அவரிடம் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு சொல்லொணா துயருக்குள்ளாவதாக புகார் அளித்தனர்.

ரஞ்சித்குமாரும் உடனடியாக அங்கிருந்து மின்வாரிய உயர் அதிகாரிக்கு (மேற்பார்வை பொறியாளர்) அலைபேசியில் அழைத்து மின்வெட்டு குறித்து கேட்டார். அப்போது அவர் உரையாடலை பொதுமக்களும் கேட்கும்வண்ணம்செல்போனை ஸ்பீக்கரில் வைத்திருந்தார்.

அப்போது எதிர் முனையில் பேசிய அதிகாரி, தன் கட்டுப்பாட்டில் உள்ள இளம்



I'd have hit him with footwear: Min threatens to transfer EB official

அதிகாரி மீது புகார் கூறியிருக்கிறார்.

அப்போது அமைச்சர் ரஞ்சித்குமார், அந்த அதிகாரியை உடனடியாக நான் கன்னியாகுமரிக்கு மாற்றிவிடுகிறேன் என்று கூறிவிட்டு, பொதுமக்களை நோக்கி, ஸ்பிக்கர் போனுடன் மைக்கை நீட்டி, இப்போது அந்த அதிகாரி மட்டும் இங்கிருந்தால் அவரை நான் செருப்பால் அடித்திருப்பேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். (ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிலும் அவ்வாறு செய்தியும் வந்துள்ளது)

குற்றம் சாட்டிய அதிகாரி பற்றியும் விசாரிக்காமல், குற்றம் சாட்டப்பட்ட அதிகாரியைப் பற்றியும் விசாரிக்காமல், 'செருப்பால் அடிப்பேன்' என்று துறை அதிகாரி மீது சொல்லும் அளவு அமைச்சருக்கு அதிகாரம் உள்ளதா?

ஜோசப் விஜய் சார்; நீங்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.